# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்
# ஆத்தூர்
------
## அசல் வழக்கு எண்.2/2021

**2025 ஆம்** வருடம் மார்ச் மாதம் 18 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியான வா.சா.2-இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெரால்டு செல்வநாதன் | ஜாதி | : | |
| த.பெ | : | சம்மனசு | தொழில் | : | தனியார் பணி |
| கிராமம் | : | பஞ்சம்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 42/2025 |

தேதி : 18.03.2025

<u>**10, 11** பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் இறந்துபோன 1 ஆம் வாதியின் சகோதரர் அந்தோணி அவர்களின் மகன் வழி பேரன் என்றால் சரிதான். இறந்துபோன 1ஆம் வாதி ஜெர்மன் என்பவர் எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சொத்தின் பாகத்தை பிரித்துக்கொடுக்க வேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கு சம்பந்தமாக 1 ஆம் வாதி ஜெர்மன் என்பவர் ஏற்கனவே சாட்சியம் அளித்துவிட்டார், அவரது தரபப்பில் ஆவணங்களும் இந்நீதிமன்றதில் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர்கள் என்ன காரணத்திற்காக பிராது தாக்கல் செய்துள்ளார்கள் என்ற முழு விபரத்தையும் தெரிந்துகொண்டேன் .அதே போல் 10, 11 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர் வழக்குரையிலும் என்ன விபரம் உள்ளது என்று தெரிந்துகொண்டேன். இறந்துபோன 1 ஆம் வாதி ஜெர்மன் என்பவர் திருமணம் ஆகாதவர் என்றால் சரிதான். இந்த ஜெர்மன் என்பவருக்கு இரண்டு உடன்பிறந்த சகோதர்களும், இரண்டு உடன்பிறந்த சகோதரிகளும் உள்ளார்கள் என்றால் சரிதான். அந்த 4 பேர்களும் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். அந்த 4 நபர்களின் வாரிசுகள் தான் இந்த வழக்கில் வாதிகள், பிரதிவாதிகளாக உள்ளார்கள் என்றால் சரிதான். ஜெர்மன் என்பவருக்கு திருமணம் ஆகாததால் இந்த வழக்கின் வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் தான் அவருக்கு சட்டப்படியான வாரிசுகளாக வருவார்கள் எனறால் சரிதான். ஜெர்மன் என்பவர் இறந்த பின்பு எதன் அடிப்படையில் நான் இந்த வழக்கில் வாதியாக வந்தேன் என்றால் அவர் எழுதி வைத்த உயிலின் அடிப்படையில் நான் வாதியாக வந்தேன். ஜெர்மன் என்பவர் தாக்கல் செய்த பிராதிலும், அவரது சாட்சியத்திலும் எந்த இடத்திலாவது மேற்கண்ட உயில் குறித்து சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை. மேற்கண்ட உயில் குறித்து அவர் இறக்கும் வரை யாருக்கும் தெரியாது என்றால் அவரது நண்பர்களுக்கும், நெருங்கிய

உறவினர்களுக்கும் மேற்கண்ட உயில் குறித்து தெரிந்திருப்பதாக சொன்னார். மேற்கண்ட உயில் குறித்து ஜெர்மன் என்பவர் இறந்த பின்பு தான் எனக்கு தெரியும். உயில் குறித்து ஜெர்மன் என்பவரின் நெருங்கிய உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் தெரியும் என்று சொல்லியுள்ளேன், அது எப்படி எனக்கு தெரியும் என்றால் ஜெர்மன் என்பவரின் இறப்பிற்கு வந்தபோது அவர்கள் உயில் குறித்து சொன்னார்கள். ஜெர்மன் என்பவர் ஆசிரியராக வேலை செய்த பள்ளியில் உடன் வேலை செய்த லூசிமேரி, அமலி ஆகியோர் உயில் குறித்து என்னிடம் சொன்னார்கள். உறவினர்கள் சின்னப்பன், அருளானந்தம் ஆகியோர் உயில் குறித்து சொன்னார்கள். மேற்கண்ட நபர்களை சாட்சியாக விசாரிக்கலாம் என்றால் அதில் தற்போது சிலர் உயிருடன் இல்லை. உயில் பதிவு செய்யப்பட்ட உயிலா என்றால் இல்லை, நோட்டரி பப்ளிக் இடம் சான்றொப்பம் பெற்றுள்ளார்கள். அதில் செல்லம் மற்றும் பாஸ்கர் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள். நோட்டரி பப்ளிக்கின் பெயர் ஞாபகமில்லை. மேற்கண்ட நோட்டரி பப்ளிக் மற்றும் சாட்சிகளை விசாரணை செய்வதில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. இந்த உயிலை இறந்துபோன ஜெர்மன் அம்மா என்பவர் ஒருபோதும் எழுதி வைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஜெர்மன் என்பவர் வேளாங்கண்ணிக்கு சென்றிருந்த போது அங்கேயே இறந்துவிட்டார். உயில் ஆவணத்தை பார்த்த பின்பு அதில் சாட்சி கையொப்பம் செய்திருந்தவர்களை பார்த்து நான் விசாரித்தேன். இறப்பிற்கு வந்தபோதே அவர்கள் சொன்னார்கள். இறந்துபோன ஜெர்மன் என்பவர் இந்த வழக்கின் 11வது பிரதிவாதி ஜோசப் ஜான் பிரிட்டோ என்பவர் மீது தான் அதிக பாசத்துடன் இருப்பார் என்றும், அவ்வாறு உயில் எழுதி வைக்க வேண்டும் என்றால் இந்த 11 வது பிரதிவாதிக்கு தான் உயில் எழுதி வைத்திருப்பார் என்று சொன்னால் சரியல்ல. உயிலில் உள்ள கையொப்பம் இறந்துபோன ஜெர்மன் என்பவரின் கையொப்பம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் உயில் தான் மேற்கண்ட உயில் ஆகும், அதில் ஜெர்மன் என்பரின் கையொப்பத்தில் I என்று இனிசியல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது இந்த வழக்கில் இறந்துபோன வாதி ஜெர்மன் தரப்பில் கையொப்பம் இட்டு இந்நீதிமன்றதில் தாக்கல் செய்யப்பட்ட வக்காலத்து என்றால் சரிதான். அந்த வக்காலத்து சான்றிட்ட நகல் <u>பி.வா.சா.ஆ.**1**</u> ஆகும். இந்த வக்காலத்தில் உள்ள I இனிசியலும், மேற்கண்ட உயிலில் உள்ள I இனிசியலும் வேறுபாடாக மாறி உள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படுவது இறந்துபோன வாதி ஜெர்மன் என்பவர் தாக்கல் செய்த பிராது நகல் என்றால் சரிதான். மேற்கண்ட பிராது சான்றிட்ட நகல் <u>பி.வா.சா.ஆ.**2**</u> ஆகும். மேற்கண்ட பிராதிலும் ஜெர்மன் என்பவர் கையொப்பத்தில் உள்ள இனிசியல் மாறி உள்ளது என்றால் சரியல்ல. நான் MBA படித்துள்ளேன். இறந்துபோன ஜெர்மன் என்பவர் ஏற்கனவே நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ள நிலையில் அந்த சாட்சியம் குறித்தும், இந்த வழக்கு குறித்தும் எந்த விபரமும் தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்துபோன ஜெர்மன் என்பவர் சாட்சியம் அளித்துள்ள கூற்றுகளுக்கு விரோதமாக எந்த கூற்றையும் சொல்வதற்கு எனக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பிராதிலும், இறந்துபோன ஜெர்மன் என்பவர் தாக்கல் செய்துள்ள முதல்

விசாரணை நிருபண வாக்குமூலத்திலும், இறந்துபோன மாங்குடி இருதயத்தின் மனைவி செசிலியம்மாள் மற்றும் அவருடைய 5 மக்கள் கிறிஸ்துவ வாரிசு உரிமை படி அடைந்து அனுபவித்து வந்தார்கள் என்று எங்காவது சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் 1982 ஆம் வருடம் பிறந்தேன். வா.சா.ஆ-17 வது ஆவணமாக கடந்த 30.11.1969 ஆம் தேதியிட்ட பஞ்சாயத்து முச்சலிகா ஆவணம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தின் படி பிராது சொத்துக்களை வாதி, பிரதிவாதிகள் அனுபவித்து வந்ததாக இறந்துபோன ஜெர்மன் அம்மாள் ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ள நிலையில் எனது நிருபண வாக்குமூலத்தில் 30.11.1969 தேதியிட்ட பஞ்சாயத்து முச்சலிகா ஊர்ஜினத்தில் இல்லை என்று சொல்வதற்கு எனக்கு எந்த வித தார்மீக உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது நிருபண வாக்குமூலத்தில் 03.01.1973 தேதி அன்று செசிலியம்மாள் என்பவர் மூலம் ஒரு பதிவு ஆவணம் எழுதப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அந்த ஆவணத்தை 12 ஆம் பிரதிவாதி தரப்பில் சான்று ஆவணமாக இந்நீதிமன்றதில் தாக்கல் செய்துள்ளார். 30.11.1969 தேதியிட்ட ஆவணத்தை படித்து பார்த்துள்ளேன். மேற்கண்ட ஆவணத்தில் செசிலியம்மாளோ, ஜெர்மனோ எவ்வித ஆவணங்களும் பதிவு செய்யக்கூடாது என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது ஊர்ஜிதத்திற்கு வரவில்லை. இந்த வழக்கை பொறுத்து ஜெர்மன் என்பவர் இறந்து உடனே வழக்கு முடிவுக்கு வந்துவிட்டது என்று சொன்னால் சரியல்ல. 30.11.1969 தேதியிட்ட ஆவணத்தின் படி செசிலியம்மாளும், ஜெர்மன் ஆகியோர்கள் இறந்தபின்பு அவர்களது உடன் பிறந்த சகோரர்களான மரியசூசை, அந்தோணி ஆகியோரின் வாரிசுகளுக்கு மேற்கண்ட இறந்தவர்களின் சொத்துக்கள் போய் சேரவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. தாவா 1வது இலக்க சொத்து கடந்த 24.05.1979 தேதியிட்ட தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் படி பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்கண்ட தான செட்டில்மெண்ட் ஆவணத்தை ஜெர்மன் என்பவரின் சகோதரர் அந்தோணி மற்றும் மரியசூசை என்பவரின் மனைவி சம்மனசு ஆகியோர் சேர்ந்து தான் ஜெர்மன் என்பவருக்கு எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான், அது செல்லத்தக்கதல்ல. அந்த தான செட்டில்மெண்ட் ஆவணத்திலும் ஜெர்மன் என்பவர் இறந்தபின்பு அதில் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் அந்தோணி மற்றும் மரியசூசை ஆகியோரின் வாரிசுகளுகக் செல்ல வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தை நான் பார்த்துள்ளேன். அந்த ஆவணத்தின் படி ஜெர்மன் என்பவர் இறந்தபின்பு 1வது இலக்க சொத்து இறந்துபோன அந்தோணி மற்றும் மரியசூசை ஆகியோருக்கு பாத்தியப்பட்டது என்பதை தெரிந்துகொண்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 1வது வாதி இறந்தபின்பு நானும், 1வது பிரதிவாதியான எனது தந்தையும் சேர்ந்து சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்று போலியாக ஒரு ஆவணத்தை உற்பத்தி செய்து நீதிமன்றத்தில சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 30.11.1969 தேதியிட்ட ஆவணத்தின் படி ஏற்கனவே குடும்பத்தார்களுக்குள் பாகப்பிரிவினை செய்துவிட்டபடியால், மேற்கண்ட ஆவண்ததின் படி

இந்த 10, 11 பிரதிவாதிகளுக்கு 2 இல் 1 பாகம் பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இறந்துபோன ஜெர்மன் அம்மாள் எந்த உயில் ஆவணமும் எழுதி வைக்கவில்லை என்றும், அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

மேற்கண்ட குறுக்கு விசாரணையை **13** ஆம் பிரதிவாதி ஏற்றுக்கொள்கிறார்**.**

**Sd/-Thiru.P.Jaisankar,**
District Munsif Cum Judicial Magistrate,
Athoor.